இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 12 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – ஆவணி 05 – புதன்கிழமை 21 ஆகஸ்டு 2024 – கோவை ★★ 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 12 : Thiruvalluvar Year - 2055 - Aavani 05 - Wednesday 21 August 2024 - Kovai ★★ 8 Pages ₹ 5.00

## ஜெயலலிதாவுக்கு இரங்கல் கூட்டம் கூட நடத்த யோக்கியதை இல்லாத எடப்பாடி குழுவினர் !

# பா.ஜ.கவுடன் ரகசிய உறவுக்கு அவசியமில்லை !

## விரக்தியில் விமர்சிப்போருக்கு கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் பதிலடி !

சென்னை, ஆக.21-

**திருவொற்றியூர் தொகுதி சட்டமன்ற கழக உறுப்பினர் கே.பி.சங்கர் இல்ல மணவிழாவிற்கு தலைமையேற்று நடத்தி வைத்து கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றும்போது “ஜெயலலிதாவுக்கு இரங்கல் கூட்டம் கூட நடத்த யோக்கியதை இல்லாத எடப்பாடி குழுவினர்” என்றும் “பா.ஜ.கவுடன் ரகசிய உறவுக்கு அவசியமில்லை” என்றும் கூறினார்.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (19.8.2024) சென்னையில், திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினரும், கழக மாநில மீனவர் அணி துணைத் தலைவருமான கே.பி.சங்கர் அவர்களின் மகன் திலீபன் - விஷாலி ஆகியோரது திருமணத்தை தலைமையேற்று நடத்தி வைத்து விழாவில் ஆற்றிய உரை வருமாறு:-

நம்முடைய சங்கர் அவர்கள் நன்றியுரை ஆற்றியபோது 30 வருடங்களுக்கு முன்பு தன்னுடைய திருமணத்திற்கு அழைத்த நேரத்தில் நான் வராமல் போனதை கொஞ்சம் வருத்தத்தோடு எடுத்துச் சொன்னார். இந்த மணவிழா நிகழ்ச்சி என்பது நம்முடைய குடும்ப நிகழ்ச்சி. நாம் எல்லாம் நம்முடைய குடும்பத்தில் ஒரு திருமணம் நடக்கிறது என்று சொன்னால், அதில் எந்த உணர்வோடு கலந்து கொண்டு வாழ்த்துகிறோமோ, அதே உணர்வோடுதான் இந்த விழாவில் நான் மட்டுமல்ல, மேடையில் இருக்கிறவர்கள் மட்டுமல்ல, நீங்களும் இங்கே வருகை தந்து மணமக்களை வாழ்த்திக் கொண்டிருக்கிறீர்கள்; வாழ்த்திக் கொண்டிருக்கிறோம்.

### மக்களுக்கு பாதுகாவல் அரணாக இருந்தவர் பரசுராமன்!

இதை கே.பி.சங்கர் இல்லத் திருமண விழா என்று சொல்வதைவிட, மறைந்த கழகச் செயல்வீரர் கே.பி.பி.சாமி இல்லத் திருமண விழா என்று சொல்லலாம். ஏன், எமெர்ஜென்சியை எதிர்கொண்ட மீசை பரசுராமன் அவர்கள் இல்லத் திருமண விழா என்றும் சொல்லலாம். இன்றைக்கும் அவருடைய முகம் என்னுடைய மனதில் ஆழமாக பதிந்திருக்கிறது. அப்படி கம்பீரமாக, இந்த திருவொற்றியூர் பகுதியில், மீனவ சமுதாயத்தினர் மட்டுமல்ல, ஒட்டுமொத்த இந்த திருவொற்றியூரில் இருக்கக்கூடிய மக்களுக்கு ஒரு பாதுகாவல் அரணாக இருந்தவர் நம்முடைய பரசுராமன் அவர்கள். அவருடைய குடும்பத்தில் நடைபெறக்கூடிய திருமணம் இது.

இவ்வாறு, வாழையடி வாழையாக, தலைமுறை தலைமுறையாக, எத்தனை சோதனை வந்தாலும், எத்தனை கொடுமைகள் வந்தாலும், எவ்வளவு அநியாயங்கள், அட்டூழியங்கள் வந்தாலும், அதையெல்லாம் எதிர்த்துப் போராடி, இந்த திருவொற்றியூர் பகுதியில் கழகம் வளர்வதற்கு பாடுபட்ட உன்னதமான ஒரு தியாகியாக வலம் வந்தவர்தான் நம்முடைய பரசுராமன் அவர்கள். அந்தக் குடும்பத்தில் நடைபெறக்கூடிய விழா இது. கிட்டத்தட்ட 60 ஆண்டு காலமாக பரசுராமன் அவர்களின் குடும்பத்தை சேர்ந்தவர்கள் உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகளாக மக்களால் தொடர்ந்து தேர்ந்தெடுக்கப்பட்டு வருகிறார்கள்.

கழகம் தொடங்கப்பட்ட நாளில் இருந்து கழகத் தொண்டராக இருந்தவர், தலைவர் கலைஞரால்தான் மீசை பரசுராமன் என்று அழைக்கப்பட்டார். முன்னாள் நகரக் கழக அவைத் தலைவராக பரசுராமன் அவர்கள் மிசாவில் கைதாகி பல அடக்குமுறைகளுக்கு எல்லாம் ஆளாகியவர். கழகத் துண்டை தோளில் இருந்து எந்த நிமிடத்திலும் அவர் எடுத்ததில்லை. எந்த நிலையிலும், யார் அழைத்தும் எந்தப் பக்கமும் சென்றதில்லை. கழகம் தான் குடும்பம், குடும்பம் தான் கழகம் என்ற உணர்வோடு வாழ்ந்து காட்டியவர்.

### அப்பாவிற்கு தப்பாமல் பிறந்த பிள்ளைகள்!

அப்படிப்பட்ட அப்பாவிற்குத் தப்பாமல் பிறந்த பிள்ளைகள்தான் கே.பி.பி.சாமி அவர்களும், கே.பி.சங்கர் அவர்களும்! கே.வி.கே. குப்பம் பகுதி மீனவ மக்களுக்காக கே.பி.பி. சாமி அவர்கள் செய்த உதவிகளை பார்த்து, 2006 சட்டமன்றத் தேர்தலில் திருவொற்றியூர் தொகுதியில் அவருக்குத் தலைவர் கலைஞர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினராக, வேட்பாளராக நிற்பதற்கு வாய்ப்பை தந்தார்கள்.

2006இல் இருந்து 2011 வரை கழக ஆட்சியில் சட்டமன்ற உறுப்பினராக மட்டுமல்ல, மீன்வளத் துறை அமைச்சராகவும் பொறுப்பேற்றுப் பணியாற்றியிருக்கிறார்.


மீன்பிடி தடைக்கால நிவாரணம், சுனாமியில் வீட்டை இழந்தவர்களுக்கு தொகுப்பு வீடுகள், சுனாமியில் பாதிப்படைந்த விசைப் படகுகளுக்கு வழங்கிய கடன் தள்ளுபடி உள்ளிட்ட பல திட்டங்களை மீனவர் நலனுக்காக செய்து சாதனை படைத்தவர்.

சட்டமன்றத்திலும் மிகச் சிறப்பாக, அவர் எழுந்து நின்றாலே, எதிரே இருக்கக்கூடிய அ.தி.மு.க.வினர் உட்கார்ந்து விடுவார்கள். ஏனென்றால், மனதில் பட்டதை அப்படியே பட்டென்று சொல்லக்கூடியவர். எதைப்பற்றியும் சொல்ல தயங்கமாட்டார். பக்கத்தில் இருக்கக்கூடிய நாங்கள் தான் கொஞ்சம் பொறுமையாக பேசுங்கள், பொறுமையாக பேசுங்கள் என்று சொல்வோம். அந்த அளவிற்கு எல்லோருடைய கவனத்தை ஈர்த்தவர் நம்முடைய மறைந்த சாமி அவர்கள். மீனவ சமுதாய மக்களுக்கு மட்டுமல்லாமல், தன்னைத் தேர்ந்தெடுத்த திருவொற்றியூர் தொகுதி மக்கள் அனைவருக்கும் பல நலத் திட்டங்களை எல்லாம் கொண்டு வந்தவர்.

### அடக்கு முறைகளுக்கு ஆளானவர்கள்!

வண்ணாரப்பேட்டையில் இருந்து விம்கோ நகர் வரையிலான மெட்ரோ ரயில் விரிவாக்கம் கொண்டு வருவதற்கும் துணை நின்றவர். 2011இல் ஆட்சி மாற்றம் நடந்து அன்றைய அ.தி.மு.க. ஆட்சியாளர்களால் பல இன்னல்களுக்கு எல்லாம் ஆளாகி, பல பொய்வழக்குகளை எல்லாம் சந்தித்து, சிறையில் பல கொடுமைகளை எல்லாம் அனுபவித்தவர் நம்முடைய சாமி அவர்கள். அவர் மட்டுமல்லாமல், அவர் குடும்பத்தில் இருந்த

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (19.8.2024) சென்னையில், சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர் அவர்களின் மகன் பி.எஸ்.திலீபன் – வி.விஷாலி ஆகியோரது திருமணத்தை தலைமையேற்று நடத்தி வைத்து, மணமக்களை வாழ்த்தினார். இத்திருமண விழாவில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், கைத்தறி, துணிநூல் மற்றும் கதர்த் துறை அமைச்சர் ஆர்.காந்தி, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் மற்றும் மரு.கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர் மு.மகேஷ் குமார், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.எஸ்.பாரதி, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத் தலைவர் பூச்சி எஸ். முருகன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் கலந்து கொண்டனர்.

## தமிழ்நாட்டி ல் ரயில்வே திட்டங்களுக்கு

# போதிய நிதி ஒதுக்கப்படுவதை உறுதி செய்திடுவீர்!

## முதல்வர் மு.க. ஸ்டாலின் - ஒன்றிய ரயில்வே அமைச்சருக்குக் கடிதம்!

சென்னை, ஆக. 21-

**தெற்கு இரயில்வே திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு குறைந்திருக்கும் நிலையில், தமிழ்நாட்டில் புதிய வழித்தடங்கள், இரட்டைப் பாதை மற்றும் வாடிக்கையாளர்களுக்கான வசதிகள் தொடர்பான திட்டங்களுக்கு போதுமான அளவிற்கு நிதி ஒதுக்கப்படுவதை உறுதி செய்திட வேண்டுமென வலியுறுத்தி ஒன்றிய இரயில்வே துறை அமைச்சர் அஷ்வினி வைஷ்ணவ் அவர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்.**

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், ஒன்றிய இரயில்வே துறை அமைச்சர் அஷ்வினி வைஷ்ணவ் அவர்களுக்கு நேற்று முன்தினம் (19.8.2024) எழுதியுள்ள கடிதத்தில், 2024-2025 நிதியாண்டில் வழக்கமான இரயில்வே பட்ஜெட்டில், தெற்கு இரயில்வே திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு குறிப்பிடத்தக்க அளவிற்குக் குறைந்திருப்பதால், அதன் விளைவாக தமிழ்நாட்டில் திட்டங்கள் செயல்படுத்தப்படுவதில் ஏற்பட்டுள்ள தாக்கம் குறித்து குறிப்பிட்டு, தமிழ்நாட்டில் புதிய வழித்தடங்கள், இரட்டைப் பாதை மற்றும் வாடிக்கையாளர்களுக்கான வசதிகள் தொடர்பான திட்டங்களுக்குப் போதுமான அளவிற்கு நிதி ஒதுக்கப்படுவதை உறுதி செய்திட வேண்டுமென வலியுறுத்திக் கேட்டுக் கொண்டுள்ளார்.

### ஏமாற்றமளிக்கும் நிதி ஒதுக்கீடு

முதலமைச்சர் அவர்கள் எழுதியுள்ள கடிதத்தில், 2024-2025 நிதியாண்டுக்கான இந்திய இரயில்வேக்கான வழக்கமான பட்ஜெட்டில், சில கணக்குத் தலைப்புகளின்கீழ் தெற்கு இரயில்வே திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பது ஏமாற்றமளிப்பதாகவும், அதே ஆண்டின் இடைக்கால பட்ஜெட்டில் ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகளுடன் ஒப்பிடும்போது இது மிகக் குறைவு என்றும் வருத்தத்துடன் குறிப்பிட்டுள்ளார்.

கணக்குத் தலைப்பு 11புதிய பாதைகள் என்பதன்கீழ் இடைக்கால ஒதுக்கீடாக 976.1 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்த நிலையில், வழக்கமான பட்ஜெட் ஒதுக்கீட்டில் வெறும் 301.3 கோடி ரூபாய்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்றும், கணக்குத் தலைப்பு 15இரட்டைப் பாதையாக்கல் என்பதன்கீழ் இடைக்கால ஒதுக்கீடாக 2,214.4 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்த நிலையில், வழக்கமான பட்ஜெட் ஒதுக்கீட்டில் 1,928.8 கோடி ரூபாய் தான் ஒதுக்கப்பட்டிருப்பதாக முதலமைச்சர் அவர்கள் தனது கடிதத்தில் கோடிட்டுக் காட்டியுள்ளார்.

### திட்டங்களின் முன்னேற்றம் கடுமையாகப் பாதிக்கப்படும்!

மேற்கண்ட நிதி ஒதுக்கீட்டில், புதிய வழித்தடத் திட்டங்களுக்கான ஒதுக்கீட்டில் ரூ.674.8 கோடி அளவிற்கு அதிரடிக் குறைப்பு செய்யப்பட்டுள்ளதால், தமிழ்நாட்டில் நடைபெற்று வரும் பல முக்கியத் திட்டங்களின் முன்னேற்றம் கடுமையாக பாதிக்கப்படும் எனக் குறிப்பிட்டு, அந்த வகையில், திண்டிவனம், செஞ்சி, திருவண்ணாமலை, திண்டிவனம், நகரி, அத்திப்பட்டுபுத்தூர், ஈரோடு,பழனி, சென்னை , கடலூர், மகாபலிபுரம், மதுரை, தூத்துக்குடி (வழிஅருப்புக்கோட்டை), ஸ்ரீபெரும்புதூர், கூடுவாஞ்சேரி, இருங்காட்டுக்கோட்டை, ஆவடி, ஸ்ரீபெரும்புதூர் ஆகிய ஏழு முக்கிய திட்டங்கள் பாதிக்கப்படும் என முதலமைச்சர் அவர்கள் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அதேபோல், இரட்டைப் பாதைத் திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீட்டை 285.64 கோடி ரூபாய் அளவிற்குக் குறைத்திருப்பது, தமிழ்நாட்டில் மிகவும் அத்தியாவசியமாக உள்ள இரட்டைப் பாதை திட்டங்களைச் செயல்படுத்துவதை நிச்சயம் தாமதப்படுத்தும் எனக் குறிப்பிட்டுள்ள தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், அந்த வகையில், விழுப்புரம், திண்டுக்கல், திருவள்ளூர், அரக்கோணம், (4வது லேன்), ஓமலூர், மேட்டூர், அணை, திருவனந்தபுரம், கன்னியாகுமரி, மதுரை, மணியாச்சி, தூத்துக்குடி, மணியாச்சிநாகர்கோவில், சேலம், மேக்னசைட் சந்திப்பு ஓமலூர், காட்பாடி, விழுப்புரம், சேலம், கரூர், திண்டுக்கல், ஈரோடு, கரூர், சென்னை கடற்கரை, சென்னை எழும்பூர், அரக்கோணம், யார்டு சாலை 1 மற்றும் 2க்கு, 3 வது மற்றும் 4 வது வழித்தடம் இணைப்பு போன்ற திட்டங்கள் பாதிக்கப்படும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

### பணிகளை தாமதமின்றி விரைவு படுத்திடுக!

மேலும், சென்னை மற்றும் அதன் சுற்றுப்புறப் பகுதிகள் தொடர்பாக தெற்கு இரயில்வேயில் நிலுவையில் உள்ள முக்கிய பிரச்சினைகள் குறித்து எடுத்துரைக்க விரும்புவதாகக் குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், குறிப்பாக, கிளாம்பாக்கம் பேருந்து நிலையம், மின்சாரப் பேருந்து சேவைகள், பெருந்திரள் துரித இரயில் போக்குவரத்துத் திட்டத்தை மாநில அரசிடம் ஒப்படைப்பது போன்ற பணிகள் எவ்வித தாமதமும் இன்றி விரைவு படுத்தப்பட வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, அப்பணிகளின் விவரங்களை தனது கடிதத்தில் விவரித்துள்ளார்.

மேற்கூறியவற்றைக் கருத்தில் கொண்டு, தமிழ்நாட்டில் புதிய வழித்தடங்கள், இருவழிப்பாதை மற்றும் வாடிக்கையாளர்களுக்கான வசதிகள் தொடர்பான திட்டங்களுக்கு போதுமான அளவிற்கு நிதி ஒதுக்கப்படுவதை உறுதி செய்திட வேண்டுமென ஒன்றிய இரயில்வே துறை அமைச்சர் அஷ்வினி வைஷ்ணவ் அவர்களைக் கேட்டுக் கொண்டுள்ள முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நிதிப் பற்றாக்குறை காரணமாக இந்த முக்கியத் திட்டங்களை மேலும் தாமதப்படுத்தக் கூடாது என்றும், இது தொடர்பாக ஒன்றிய இரயில்வே துறை அமைச்சர் அவர்கள் தனிப்பட்ட முறையில் தலையிட வேண்டுமென்றும் தனது கடிதத்தில் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டுள்ளார்.